# இயேசு, மரியா, யோசேப்பின் திருக்குடும்பம்

# திருவழிபாடு ஆண்டு - B

# 2023-12-31

(*இன்றைய வாசகங்கள்:*

*தொடக்க நூலிலிருந்து வாசகம்* 15: 1-6; 21: 1-3 , *திருப்பாடல்* 105: 1-2. 3-4. 5-6. 8-9, *எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்* 11: 8, 11-12, 17-19 , *லூக்கா எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம்* 2: 22-40)

*திருப்பலி முன்னுரை*

*அன்பிற்கினியவர்களே! திருக்குடும்ப பெருவிழா திருப்பலிக்கு வந்திருக்கும் அனைவருக்கும் இயேசுமரி சூசையின் திருக்குடும்ப பெருவிழா நல்வாழ்த்துக்கள். இறைவனின் மீட்புத்திட்டத்திற்கு தன் ஒத்துழைப்பை கொடுத்த நேர்மையாளரான சூசை, கன்னிமை குன்றா கன்னிமரியாள், மனுவுரு எடுத்த இயேசு கிறிஸ்து இம்மூவரும் இணைந்து ஏற்படுத்தியது தான் திருக்குடும்பம். ஒவ்வொரு குடும்பமும் இப்படி தான் வாழ வேண்டும் என்பதற்கு சிறந்த மாதிரியான குடும்பம் இயேசுமரி சூசையின் திருக்குடும்பம் .குடும்பம் உயிர்களின் பிறப்பிடம். உறவுகளின் ஊற்று.ஒருவர் மற்றவரை சார்ந்து அன்பு செய்து வாழ ஏற்ற இடம் குடும்பம். இன்பத்திலும் துன்பத்திலும் உடல்நலத்திலும் நோயிலும் நான் உனக்கு பிரமாணிக்கமாய் இருப்பேன் என்ற திருமண வாக்குறுதியுடன் தொடங்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றும் திருக்குடும்பமாகி வாழ அழைக்கப்படுகின்றது. இறைவனின் அருள் பெற்றிருக்கின்றது. திருக்குடும்பத்தின் பாதுகாவலரான யோசேப்பிடம் காணப்பட்ட நேர்மை, கண்ணியம், கடமை, பொறுப்பு, கடின உழைப்பு, தந்தை உள்ளம் ஒவ்வொரு குடும்ப தலைவியிடமும் காணப்பட வேண்டும். திருக்குடும்பத்தின் தலைவியான அன்னைமரியாளின் அடக்கம், பணிவு, கற்பு, தாயுள்ளம், நன்றியுணர்வு உதவிசெய்யும் உள்ளம் ஒவ்வொரு குடும்ப தலைவியிடமும் காணப்பட வேண்டும். திருக்குடும்பத்தின் மையமாக திகழும் இயேசுவிடம் காணப்பட்ட குழந்தையுள்ளம், கீழ்படிதல், ஞானம் இறையன்பு, பிறரன்பு, துணிவு நம் குழந்தைகளிடமும் காணப்பட வேண்டும் என்பதைத் தான் இன்று நம் திருஅவை கொண்டாடும் திருக்குடும்ப பெருவிழா நமக்கு கற்றுக்கொடுக்கின்றது. இன்றைய திருப்பலிபீடம் நம் அனைவரின் குடும்பங்களையும் கொண்டு வருவோம். நம் குடும்பத்தின் அமைதியை சீர்குலைக்கும் ஒவ்வொரு பிரச்சனைகளையும் ஆண்டவரிடம் அர்ப்பணிப்போம். ஆண்டவரின் திருக்குடும்ப அருள் நம் குடும்பங்களை நிரப்பவும், நம் குடும்பமும் திருக்குடும்பமாக வாழ அருள் வேண்டுவோம். கணவன் - மனைவியிடையே ஒன்றிப்பு, பெற்றோர் - பிள்ளைகளிடையே அன்பு, உற்றார் - உறவினர்களிடையே நற்பண்பு போன்ற பூக்கள் நம் குடும்பத்தில் மலர வரம் வேண்டி தொடர்ந்து இணைந்து ஜெபிப்போம் இத்தெய்வீக திருப்பலியில்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்புத்தந்தையே இறைவா!*

*உம் திருஉடலாம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் ஆகியோர் அனைவரையும் உம்பாதம் அர்ப்பணிக்கிறோம். உம் பணியை தங்கள் வாழ்வாக்கி, இறைமக்களை அன்பின் சமூகமாக கட்டியெழுப்பவும், உம் அன்புக் கட்டளைகளை தங்கள் வாழ்நாளெல்லாம் கடைபிடிக்கவும் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*தாயும் தந்தையுமான இறைவா!*

*இயேசுவை மூலைக்கல்லாக கொண்டு இயங்கிவரும் எம் திருஅவை, இன்று கொண்டாடும் கிறிஸ்மஸ் பெருவிழாவினை மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும், அருள் அள்ளித்தரும் விழாவாக அமையும் வண்ணம் அர்த்தமுள்ள வகையில் கொண்டாடி திருக்குடும்பத்தின் வழியில் ஒவ்வொரு குடும்பத்தினையும் வழிநடத்திட தேவையான புதிய ஆன்மீகத்திட்டங்களை மேற்கொள்ள குழந்தையேசுவின் ஆசீரைத் தந்தருள் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*இயேசுவின் மனுவுரு வழியாக உலகிற்கு விடுதலையையும், வாழ்வையும் கொடுத்தவரே!*

*எம் இல்லற வாழ்வில் குடும்ப அமைதியை சீர்குலைக்கும் எந்த முறைக்கேடுகளும் நடக்காமல் ஒருவர் ஒருவரை ஒன்றிணைக்கும், புரிந்துகொள்ளுதல் விட்டுக்கொடுத்தல் அன்பு போன்ற திருக்குடும்ப நற்பண்புகள் எங்கள் பங்கின் எல்லா குடும்பங்களிலும் நிலவ குழந்தை இயேசுவின் ஆசீரை தந்தருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*நலம் அருளும் நல்ல ஆயனே இறைவா!*

*உடல்நலக் குறைவினால் மருத்துவமனையிலும், தங்கள் இல்லங்களிலும் இருந்து சிகிச்சை பெறும் ஒவ்வொரு நல்ல உள்ளங்களுக்காவும் உம்மிடம் மன்றாடுகிறோம். உமது அன்புக் கரங்களால் அவர்கள் ஒவ்வொருவரையும் தொட்டு குணப்படுத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*இறைவா!*

*குழந்தையேசுவையும், அன்னைமரியாளையும் பாதுகாப்புடன் பராமரித்து நடத்திட்ட சூசையப்பரைப் போல எல்லா குடும்பத்தலைவர்களும் தன் குடும்பத்தை பாதுகாத்து நடத்திட வேண்டிய பொறுப்புணர்வையும், கடமையுணர்வையும் தந்து தனது கடின உழைப்பால், நேர்மையான உள்ளத்தால் குடும்பவாழ்வை சீரும் சிறப்புமாய் வளமைப்படுத்திட குழந்தையேசுவின் ஆசீர் தந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அன்புத்தந்தையே இறைவா!*

*குழந்தையேசுவைப் பெற்றெடுத்த மகிழ்வில் இருக்கும் அன்னை மரியாவைப் போல எல்லா தாய்மார்களும் குடும்பத்தை மகிழ்விக்கும் சவாலைச் சந்திக்க மனவலிமையும் உடல் பலமும் எளிய உள்ளமும் பெற்றிட குழந்தையேசுவின் ஆசீரை அவர்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*